சென்னை மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள், சென்னை– 08.

ந.க.எண்.6902/ஆ2/2022, நாள். 07.10.2022

| | | |
|---|---|---|
| பொருள் | | தமிழ்வளர்ச்சித் துறை– 2021–2022 ஆம் ஆண்டு மானியக் கோரிக்கை அறிவிப்பு – நாட்டிற்காக பாடுபட்ட தலைவர்களின் பிறந்த நாளன்று மாவட்ட அளவில் பள்ளி மாணவர்களுக்கு பேச்சுப் போட்டிகள் நடத்திப் பரிசுகள் வழங்குதல் – அவ்வகையில் 2022–2023 ஆம் நிதியாண்டிற்கு அண்ணல் காந்தியடிகளின் பிறந்த நாளை முன்னிட்டு 12.10.2022 அன்று பேச்சுப் போட்டிகள் நடத்துதல் – சென்னை மாவட்டப் பள்ளி மாணவர்களுக்கு மாவட்ட அளவில் பேச்சுப் போட்டிகள் நடத்தி பரிசுகள், பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்குதல் – தொடர்பாக. |
| பார்வை | 1 | சென்னை–06, தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநரின் கடிதம் 9955/ஆ.மொ4/2022, நாள்.26.09.2022 |

*************

மேற்காண் பொருள் சார்ந்து பார்வையில் காணும் கடிதத்தில், தமிழ் வளர்ச்சித் துறையின் 2021–2022 ஆம் ஆண்டு மானியக் கோரிக்கை அறிவிப்பிற்கிணங்க நாட்டிற்காகப் பாடுபட்ட தலைவர்களான மகாத்மாகாந்தி, ஜவஹர்லால்நேரு, அண்ணல்அம்பேத்கார், தற்தைபெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர் கலைஞர் ஆகியோரின் கருத்துக்களையும் சமூகச் சிந்தனைகளையும் இளைய தலைமுறையினரிடம் கொண்டு சேர்க்கும் வண்ணம் ஆண்டு தோறும் அவர்களது பிறந்த நாளன்று மாவட்ட அளவில் கல்லூரி, பள்ளி மாணவர்களுக்குப் பேச்சுப் போட்டிகள் நடத்திப் பரிசு, பாராட்டுச் சான்றிதழ் வழங்கப்பட அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

தற்போது 2022–2023 ஆம் ஆண்டிற்கு மாவட்ட அளவில் பள்ளி மாணவர்களுக்கு அனைத்து மாவட்டங்களிலும் அண்ணல் காந்தியடிகளின் பிறந்த நாளையொட்டி வருகிற 12.10.2022 அன்று பேச்சுப் போட்டிகள் நடைபெறவுள்ளன. மேலும், இப்பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு முதல் பரிசு ரூ.5000/– மும், இரண்டாம் பரிசு ரூ.3000/– மும், மூன்றாம் பரிசு ரூ.2000/– மும் வழங்கப்பெறும். மேலும், இப்போட்டியில் பங்கேற்று வெற்றி பெறும் அரசுப் பள்ளி மாணவர்களுக்கு சிறப்பு பரிசு ரூ.2000/– வீதம் 2 பேருக்கும் மற்றும் சான்றிதழும் வழங்கப்பெறும் எனதெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, பார்வையில் காணும் சென்னை–08, தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் அவர்களின் செயல்முறைக்கடிதத்தின்படி, அண்ணல் காந்தியடிகளின் பிறந்த நாளையொட்டி வருகிற 12.10.2022 அன்று பேச்சுப் போட்டிகள் நடைபெறவுள்ளதாகவும் அப்போட்டிக்கான நடுவர்கள் பெயர் பட்டியல் அனுப்பி வைத்திட கோரியுள்ளார். எனவே, கீழ்க்கண்ட மையங்களில் நடைபெறவுள்ள போட்டிகளுக்கான நடுவர்களை நியமனம் செய்து ஆணையிடப்படுகிறது. இப்போட்டிக்கான ஒருங்கிணைப்பாளராக அந்தந்தப் பள்ளித் தலைமை ஆசிரியரே செயல்படுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

| வ. எ ண் | இறுதிப் போட்டி நடைபெறும் மையங்கள் | போட்டி நடைபெறும் பள்ளிகள் விவரம் | நியமனம் செய்யப்படும் நடுவர்களின் பெயர் பதவி மற்றும் பள்ளியின் பெயர் | | ஒருங்கிணைப்பாளர் |
|---|---|---|---|---|---|
| 1 | . தென் சென்னை கல்வி மாவட்டம் | ஜெய கோபால் கரோடியா பெண்கள் மேல்நிலைப் பள்ளி, சைதாப்பேட்டை, சென்னை–15 | 1 | திருமதி. A.வெண்ணிலா, முதுகலை ஆசிரியர், அரசு மேல்நிலைப் பள்ளி, எம்.ஜி.ஆர்.நகர், சென்னை–78 | தலைமை ஆசிரியர், ஜெய கோபால் கரோடியா பெண்கள் மேல்நிலைப் பள்ளி, சைதாப்பேட்டை, சென்னை–15 |
| | | | 2 | திருமதி.J. சங்கரி, முதுகலைஆசிரியர், அரசுமேல்நிலைப் பள்ளி, எம்.எம்,டி.ஏ.காலனி, சென்னை–106 | |
| | | | 3 | திருமதி.திருமதி. உமாமகேஸ்வரி. வி. முதுகலைஆசிரியர், அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி, அசோக் நகர், சென்னை – 83 | |
| | | அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி, அசோக் நகர், சென்னை – 83 | 1 | திருமதி.S.சுப்புலட்சுமி, முதுகலை ஆசிரியர், அரசு மேல்நிலைப் பள்ளி,வேளச்சேரி, சென்னை– 42. | தலைமைஆசிரியர், அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி, அசோக் நகர், சென்னை – 83 |
| | | | 2 | திருமதி. R.மலர்விழி, முதுகலை ஆசிரியர், ஜெய கோபால் கரோடியா பெண்கள் மேல்நிலைப் பள்ளி, சைதாப்பேட்டை, சென்னை–15 | |
| | | | 3 | திருமதி.B. கவிதா, முதுகலை ஆசிரியர், அரசு மேல்நிலைப் பள்ளி, எம்.கே.பி. நகர், சென்னை– 39. | |
| 2 | வட சென்னை கல்வி மாவட்டம் | அரசு உயர்நிலைப் பள்ளி, வில்லிவாக்கம், சென்னை– 49. | 1 | திருமதி. S.விஜயலட்சுமி, முதுகலை ஆசிரியர், முஸ்லீம் மேல்நிலைப் பள்ளி, தாயார் சாகிப் தெரு, சென்னை – 02 | தலைமை ஆசிரியர், அரசு உயர்நிலைப் பள்ளி, வில்லிவாக்கம், சென்னை– 49. |
| | | | 2 | திருமதி. S.வித்யா, முதுகலைஆசிரியர், ஜெயகோபால்கரோடியாபெண் கள்மேல்நிலைப் பள்ளி, விருகம்பாக்கம், சென்னை–92 | |
| | | | 3 | திருமதி. R.மோட்சராகினி, முதுகலைஆசிரியர், அரசுமாதிரிமேல்நிலைப் பள்ளி, திருவல்லிக்கேணி, சென்னை– 05. | |

12.10.2022 அன்று வருவாய் மாவட்ட அளவில் 3 மையங்களில் நடைபெறவுள்ள பேச்சுப் போட்டியினை நடத்திட மேற்காண் நடுவர்களாக நியமனம் செய்யப்பட்டுள்ள முதுகலை ஆசிரியர்களை அப்பணியினை மேற்கொள்ள ஏதுவாக உரிய நாளில் பள்ளிப்பணியிலிருந்து சார்ந்த ஆசிரியரை விடுவித்து அனுப்பிவைத்திடுமாறு சார்ந்தப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

7/10/2022

முதன்மைக் கல்வி அலுவலருக்காக
சென்னை – 08.

07/10/22.

பெறுநர்
சார்ந்த ஆசிரியர்கள் ( தலைமையாசிரியர்கள் மூலமாக).

நகல்

1. சென்னை – 08, தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் அவர்களக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.
2. சார்ந்தப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள்.
3. சார்ந்த மையப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள்.